# காஞ்சி



ஆசிரியர்

அண்ணாதுரை

19-6-66

விலை 20 காசு

# கேள்வி--பதில்!

(1) எதாவது திட்டம் சொல்லுங்கள என்று கேட்டால், உங்கள் கட்சித் தலைவர்களுக்கு உருப்படியான ஒரு திட்டமாவது சொல்லத் தெரிகிறதா? போயும் போயும் 'கசாப்புக்கடை' திட்டம் தானே கூறினார்கள் என்று ஒரு காங்கிரஸ்காரர் கேலிபேசுகிறார், என்னபதில் சொல்லுவது?

கேலி பேசுபவருக்குச் சொல்லுங்கள், ஆட்டு இறைச்சித் தொழிலை நடத்துவது கேவலம் என்று பேசிய காங்கிரஸ் ஆட்சியினர் நாலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பன்றிப் பண்ணை நடத்தவும் பன்றி இறைச்சித்தொழிலை நடத்தவும் தீர்மானித்து இருப்பதை./ அதுமட்டுமல்ல, மற்றோர் 'உயர்தரமான' தொழிலையும் காங்கிரஸ் ஆட்சியினர் மேற்கொண்டுள்ளனர். அதற்காக இரண்டு உயர்ரக அதிகாரிகளைக் கூட நியமித்திருக்கிறார்கள். என்ன தொழில் தெரியுமா? தவளைகள் வளர்ப்பது!! ஆமாம்! தவளைக்கால்களுக்கு அமெரிக்காவிலும் பிரான்சிலும் ஏகப்பட்ட கிராக்கியாம்! இங்கிருந்து அனுப்பப்படுகிறது. அந்தத் தொழிலை வளர்த்திடத் திட்டமிட்டு இருக்கிறது காங்கிரசாட்சி! தவளைக் கால் தொழில்! இதற்கென்ன சொல்லுவாரோ கேலிபேசும் காங்கிரஸ்காரர்!

(2) முதலமைச்சர் பக்தவத்சலம் ரூபாயின் மதிப்பைக் குறைத்ததை ஆதரித்திருக்கிறாரே, ஏன்?

அனுபவம் மிக்கவரல்லவா! அதனால்!! பெரிய இடத்திலே முடிவு செய்தான பிறகு, 'ஆமாம் சாமி' போடாமல், எதிர்த்தால் ஒரு பயனும் இல்லை. ஆகவே தர்பாருக்குச் 'சலாம் அலேகும்' போட்டுவிடுவதுதான் புத்திசாலித்தனம் என்ற எண்ணம். அனுபவம் நிறைய அல்லவா அவருக்கு—'ஆமாம் சொல்லிச் சொல்லி!

(3) நாணயத்தின் மதிப்பைக் குறைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர் திருத்த முயற்சித்த நாடுகளே இல்லையா?

ஓ! இருக்கிறதே! இந்தோனேஷியாவில் டாக்டர்சுகர்ணோ அந்த நாட்டு நாணயத்தின் மதிப்பைக் குறைத்தார்! பலன் என்ன என்று கேட்கிறீரா? சுகர்ணோவின் மதிப்பு மடிந்து விட்டிருக்கிறது. நாட்டுப் பொருளாதார நிலையும் சீர்படவில்லை.

(4) சந்திரன், வியாழன் போன்ற கிரகங்களுக்குச் சென்றிட இவ்வளவு பெரிய ஆராய்ச்சியும் செலவும் தேவைதானா என்று கேட்கிறார், என் நண்பரொருவர். என்ன சொல்லுகிறீர்?

யாரைய்யா அந்த நண்பர்! உள்ளூர் கோயில் அர்ச்சகரோ? அவருக்குத்தான் அப்படிப்பட்ட அபாரமான யோசனை தோன்றும். ஏனென்றால், நவக்கிரகமும் ஒரு இடத்திலே இங்கே அடைபட்டுக் கிடக்கும்போது, சந்திரன் எப்படி வியாழன் எப்படி என்று கண்டறிய ஏகப்பட்ட செலவு ஏன் செய்கிறார்கள்; இங்கே வந்தால், நான் அழைத்துக் கொண்டுபோய்க் காட்டுவேனே—வெகு எளிதாக—நாற்பது, ஐம்பது பைசா செலவில் என்று சொல்லத் தோன்றும் அவருக்கு!

(5) நான் அங்கே இருந்திருந்தால் ரூபாயின் மதிப்புக் குறைந்திருககாது என்கிறாராமே டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சொல்லலாமா?

அப்படிக் கேட்கவேண்டும், காங்கிரசின் பெருந்தலைவர்! கேட்க மாட்டாரே!! டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சும்மா காமராஜரை விளாசுவார்! ஆகவே அவர்குட்டுகிறார், பெருந்தலைவர்கள் பொறுத்துக் கொள்கிறார்கள்.

(6) காமராஜர் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்யும்போது, இந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வேறு எதற்காகச் சுற்றுகிறார்?

படித்தவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன் மற்றவர்களை நீ கவனித்துக்கொள் என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் காமராஜரிடம் சொல்லிவிட்டுத்தான் இந்த பயணம் மேற்கொண்டாராம்!! 'சோப்பு'ப் போடுவது என்கிறார்களே தெரியுமல்லவா; அது அவர் வேலை. சோப்பு வியாபாரிதானே! அதனால்!!

(7) வலதுசாரி கம்யூனிஸ்டுகளின் போக்கு, கேரளாவிலும் ஆந்திராவிலும் மாறிக்கொண்டு வருகிறதே, தமிழ் நாட்டிலும் மாறுமா?

இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கொடுக்கிற அடி படார்! படார்! என்றுமேலும் மேலும் விழ விழ, மாறித்தானே ஆகவேண்டும். இரண்டு மாதங்களில் புதிய போக்கு கொள்ளக் கூடும்; வலதுசாரிகள் தமிழ் நாட்டிலும்.

(8) தி மு. கழகத்தைக் கண்டித்துப் பேசும், மாளவியா பற்றிய தகவல் தருவீரா?

அதிகம் தெரியாது; இரண்டு தகவல்கள் தருகிறேன். ஒன்று மாளவியா மந்திரியாக இருந்தார். கல்கத்தா முதலாளி சிராஜுதீனிடம் கைநீட்டினார் என்று புகார் வந்தது. பணம் வாங்கினேன், ஆனால் எனக்காக அல்ல, கட்சிக்காக என்று கூறினார். மந்திரி வேலையையும் விட்டுவிட்டார். இரண்டாவது தகவல், இப்போது நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில், போட்டியிட்டுத் தோற்றுப் போனார்.

(9) இந்திய 'ஒருமைப்பாடு' எந்த அளவுக்கு வளர்ந்து இருக்கிறது?

பம்பாய் முதலமைச்சருக்கு மைசூரில் கொடும்பாவி கட்டிக் கொளுத்தும் அளவுக்கு!

(10) பணத்தைப்பற்றிய கவலையற்றவர்கள் யார்?

ஒன்று, பண்டாரம்!

மற்றொருவர், பாதுஷா!

(11) எட்டும் எட்டும் பதினெட்டு ஆகுமா?

ஓ! ஆகுமே!!

மந்திரிகள் பேசும்போது!!

*

**உலகம் இனிக்கும்!**

"ஒரு கவளம் சோறும், அலுப்புத்தீரத் தூங்கச் சிறு கட்டிலும் உடையவன் எவனே, அவன் யாருக்கும் அடிமையாகவோ, எஜமானுகவோ இல்லாதிருப்பின், அவன் என்றும் இன்பம் உடையவன்; உலகமே அவனுக்கு இனிக்கும்,

-உமர்கையாம்.


# காஞ்சி

மலர் 2 19-6-66 இதழ் 47


## பெரும் பொறுப்பு

**ஜனநாயகப் பாதையிலிருந்து வழுவி காங்கிரசுக் கட்சி, தொலைதூரம் வந்துவிட்டது.** அது எதேச்சாதிகாரப் பாதையில் நடக்கத் தொடங்கி, அதனுல் பேரபாயங்களும் ஏற்பட்டுவிட்டன.

நாட்டின் பல்வேறுபட்ட தேவைகளுக்குள், முதல் தேவை,—அவசர, அவசியமான தேவை, — **காங்கிரசின் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தி, ஜனநாயகத்தைக் காப்பதுதான்.**

ஜனநாயகத்தைக் காப்பாற்றித் தீர வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. **ஜனநாயகம் காக்கப்பட வேண்டுமானுல் காங்கிரசின் ஆட்சி உடனடியாக அழிக்கப்பட்டாக வேண்டும்.**

காங்கிரஸ் அகற்றப்படவேண்டுமானுல், வருகிற பொதுத் தேர்தலில் **காங்கிரசுக் கட்சிக்கு எதிரான வாக்குகள் சிதருமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.**

காங்கிரசுக்கு எதிரான வாக்குகள் சிந்தாமல், சிதருமல் இருக்கவேண்டுமானுல் நம் நாட்டு **எதிர்க் கட்சிகள் உடனடியாக ஒரு உடன்பாட்டுக்கு வந்தாக வேண்டும்.**

இந்த உடன்பாடு, **காங்கிரசின் சர்வாதிகார ஆட்சியை அழித்து ஒழிக்கவே தவிர,** கட்சிகள் ஒன்ருேடொன்று இணைந்து அழிந்து போகவல்ல.

**நம்முதல்தேவை, காங்கிரசாட்சியை மாற்றுவது; அதற்கு மட்டுமே நாம் தொகுதி உடன்பாடுகள் செய்துகொள்கிருேம்.**

மேலே கண்ட விளக்கத்தை நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கடந்த 11, 12ல் திருச்சியில் நடைபெற்று முடிந்த இரு மாவட்டங்கள் இணைந்த பெருமாநாட்டில் **'எதிர்க் கட்சிகளை இணைப்பது'** என்ற தீர்மானத்தின்மீது பேசுகையில் அறிவித்தார்.

பொது வாணிகங்களும், தொழில்களும் நாட்டுடைமை ஆக்கப்படுவதை சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது.

இனத்தினடிப்படையில் இயங்கிக் கொண்டிருப்பது முஸ்லிம் லீக்கட்சி.

**இவ்விரண்டையும் கொள்கை ரீதியாகக் கூட அல்ல; அடிப்படை இலட்சியங்களாகவே எதிர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம்.**

இந்நிலையில், இந்த மூன்று கட்சிகளும் எப்படி இணைய முடியும் என்று தேர்தல் ஜன்னியில் தங்கள் சுயநினைவு இழந்து தொடர்பற்ற—பொருளற்ற வார்த்தைகளை உமிழ்ந்துகொண்டிருக்கும் காங்கிரசுக்காரர்களும், அவர்களது பாதம் வருடுவது—துதி பாடி ஸ்தோத்தரிப்பது—இவைகளினுல் மட்டுமே, தங்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டிருப்பவர்களும் பேசத் தலைப்பட்டு, பேச்சுக்களின் மூலக் கருவாகவே இதனை ஆக்கிக்கொண்டிருக்கிருர்கள்.

இத்தகைய பரிதாப நிலைக்கும்—இரங்கத்தக்கவர்களுக்கும் பதில் சொல்லும் சரியான விளக்கம்தான் நாவலர் அவர்களுடைய பேச்சாகும்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், சுதந்திரா, லீக் — தி. மு. கழகம் மட்டுமே, உடன்பாடு செய்து கொண்டிருக்கவில்லை. இவைகளுடன், இடதுசாரி கம்யூனிஸ்டுகளும், தமிழரசுக் கழகமும் இன்னும் சில எதிர்க் கட்சிகளும் உடன்பாட்டுக்கு இணக்கம் தெரிவித்து அறிவிப்பும் கொடுத்துவிட்டுள்ளன. வலதுசாரிகள்கூட **'தொகுதி உடன்பாடு'** பற்றிச் சிந்திக்கத் தொடங்கி இருக்கிருர்கள்.

சுதந்திரக் கட்சிக்குத் தனிக்கொள்கை உண்டு; கொடி உண்டு.

லீகுக்கும் தனிக் கொள்கையும், கொடியும் உண்டு.

பிற எல்லா எதிர்க் கட்சிகளுக்குமே ஒன்ருேடொன்று இணையவே முடியாத அளவுக்குத் தனித் தனிக் கொள்கைகள் உண்டு; தனித் தனிக் கொடிகள் உண்டு.

என்ருலும், **திராவிட முன்னேற்றக்கழகம் இந்த எல்லா எதிர்கட்சிகளுடனும், காங்கிரஸ் என்ற பயங்கர ஜனநாயகத்துக்கு விரோதமான பொது எதிரியை வீழ்த்துவது என்ற ஒன்றுக்குக்கு மட்டுமே இணைகிறது.**

என்ற திட்டவட்டமான அறிவிப்பையும் நாவலர் அவர்கள் அங்கு அறிவித்துள்ளார்.

இந்த விளக்கத்தைப் பெற்ற பின்னரும், காங்கிரசுக்காரர்களும்-சரி, பாதந் தாங்கி பாவ மன்னிப்புப் பெறப் புகுந்து அவர்களது எடுபிடிகளாகிவிட்டவர்களும்சரி, ஓய்ந்திருக்கப்போவதில்லை. அளவைக்கடந்து விட்ட ஜன்னி வேகத்தில், அணையப் போகிருேமே என்ற அங்கலாய்ப்பில், வர வர அவர்களது பேச்சுக்களில் முடைநாற்றமிருக்கும். எழுத்துக்கள் கழுநீர்க் காலில் தோய்க்கப்பட்டனவாக மிளிரும். செயல்களில் வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்ட முடியாத அளவுக்குத் தங்களுக்குத் தாங்களே உதாரண புருடர்களாய் மாறுவர்.

கடந்த 19 ஆண்டுக் கால ஆட்சியின் அலங்கோல நிலை பற்றியும், சர்வாதிகாரத் தன்மை பற்றியும், ஜனநாயகத்தின் முரண்பட்ட போக்கு பற்றியும் நாம், அவ்வப்போது சரியான ஆதாரத்துடனும், புள்ளி விவரங்களுடன் காட்டிக் காட்டி விளக்கங்களளித்த

போதெல்லாம் கேளாக் காதுகளுடனும், பழுதுபட்ட பார்வையுடனும், வாய் நரம்பு அறுபட்டவர்களாய் இருந்துவந்த அந்த எதேச்சாதிகார அமைப்பாளர்கள், இனியும், நாம்தரும் விளக்கம் கேட்டுப் புத்தித்தெளிவு அடைவார்கள்—கருத்தில் மாற்றம் தேடிக்கொள்வார்கள்—செயலில் அறிவுடைமை இருக்கும் — என்று யாரும் நம்பமுடியாது; எதிர்பார்க்கவும் இயலாது.

நம் நாட்டு அறிவாளர்களது அறிவுரையையும் யோசனைகளையும் கேட்டு செயல்படும் நிலையில், காங்கிரசுக்காரர்களும் சரி, காங்கிரஸ் ஆட்சியினரும் சரி இல்லை என்பதும், வெளிநாட்டார்களது அறிவுரைக்கும் யோசனைக்கும் மட்டுமே தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் நிலைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ ஆளாகிவிட்டார்கள் என்பதும் — வெளிப்படையாக விளங்கிவிட்ட நிலையில், நாம் காங்கிரசு ஆட்சியினரிடமிருந்தும், அக்கட்சியினரிடமிருந்தும் எதனையும் எதிர்பார்ப்பதற்குமில்லை.

**என்றாலும், இந்தியத் துணைக்கண்டத்து மாநிலங்களிலெல்லாம் இருக்கின்ற எதிர்க்கட்சிகள் அனைத்துக்குமே ஒரு இணையற்ற எடுத்துக் காட்டாக இயங்கிக்கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், தனது ஜனநாயகக் கடமைகளில் வழுவவில்லை; இனியும் வழுவாது என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டவேதான் நாவலர் அவர்கள் மேற்கண்ட விளக்கத்தை திருச்சி மாநாட்டின் மூலமாக நாட்டுக்கு அறிவித்துள்ளார்கள்.**

நாவலர் தந்த அந்த நல்ல விளக்கத்தை, ஜனநாயகக் குரல் எழுப்பும் பல ஏடுகள் முழு அளவிலும், விளக்கமாகவும் வெளியிடாது, இதுவரை நமக்கு ஏடுகளிலும், இதழ்களிலும் இடம் அளிக்கப்பட்டதைப் போலவே.

நாவலரது விளக்கம் ஒரு அளவு; மற்ற தலைவர்களது விளக்கம் ஒரு அளவு. இவை அனைத்துமே இதழ்களில் முழு அளவுக்கு இடம் தரப்படமாட்டாமல் சுருக்கிவிடப்படும்.

**சுருக்குதல்** என்பதன் பேரால் சிதைத்து, சித்திரவதைக்கும் ஆட்பட்டு—வெளியிடப்படும் செய்திகளில் முழுவிளக்கமும் கிடைக்கப் பெற முடியாது.

மாநாட்டிற்கு வந்திருந்து தலைவர்கள் தந்த எல்லா விளக்கங்களையும், அறிவுரைகளையும் கடமைப்பாடுகளையும் கேட்ட நமது தோழர்கள்—

மாநாட்டிற்கு வர இயலாமற்போனவர்களுக்கும், வரமுடியாத நிலையிலிருந்தவர்களுக்கும், கடைசிநேரத்தில் பயணத்தை ரத்துச்செய்துவிட்டு, வாழ்க்கைக் கடனில், தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களுக்குமாக விளக்கம் தந்து தீரவேண்டும்.

இத்தகைய விளக்கங்கள்—**தோழர்களால் நேர்முகமாக எடுத்துக் காட்டப்படும் கருத்துரைகள் நல்ல பயனை அறுவடை செய்யும்,** இதழ்களால் கிடைக்கப்பெறும் பயனைக் காட்டிலும் பன்மடங்கு பயன் இதனால் உண்டு.

இத்தகைய வழி முறைகளினாலேயே நாம் வளர்ந்தவர்கள் இனியும் வளர்வோம்.

**வளர்கின்ற அந்த வளர்ச்சியும், பெறுகின்ற அந்த பயனும், மாற்றார் மருளத்தக்கதாக இருக்கும். 1967-ல் நமது ஆட்சி அமைக்கத் தக்கதாக அமையும்.**

---

### முகப்பில்

**தஞ்சை—திருச்சி மாநாட்டின் சிறப்பிற்குப் பலவழியிலும் பங்கேற்ற கழக முன்னணியினர்.**

---

எனவே, மாநாட்டிற்கு வந்திருந்த கழகத் தோழர்கள் வாராதிருந்தோருக்கு மாநாட்டின் தீர்மானங்களையும், நடவடிக்கைகளையும், பெற்ற கருத்துரைகளையும், அறிவித்த கடமைகளையும் எடுத்துக் காட்டும் பெரும்பணியில்—சீரிய தொண்டில் இன்றே ஈடுபடவேண்டும் என்பதை அன்புமிகுந்த வேண்டுகோளாக-தவறிவிடக் கூடாத கடமையாக-நினைவுபடுத்திக் கொள்கிறோம்.

இந்தக் கடமையைச் செயலாற்றும் தன்மையில் தான் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு அடங்கிஇருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறோம்.

# பதவி துறக்கட்டும்

நாட்டு மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தருவதற்கும், அந்தப் பாதுகாப்புக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமே ஒரு ஆட்சியினர் ஒரு நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றனர். இதற்கான செயல்முறைகளைத்தான் ஆட்சிமுறை என்றும் கூறப்படும்.

ஆட்சியினரின் அன்றாட வடிக்கைகள் அனைத்தும் மொத்த,நிகழ்கால—வருங்கால திட்டங்கள் அனைத்தும் நாட்டு மக்களது உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தரும் நடவடிக்கையின் அடியாய்ப் பிறப்பது தான் என்பது அகிலம் ஒப்புக்கொண்டுள்ள உண்மையாகும்.

மனித உயிருக்கும், உடைமைக்கும் ஒரு நாட்டாட்சியில் பாதுகாப்பு இல்லையென்றால், மக்கள் காடுகளில் சென்று வாழலாம். காட்டு மிருகங்களுக்கு இறையாகலாம். அந்த நிலை மக்களுக்கு ஏற்படுமானால், நாட்டில் இருப்பது ஒரு நல்லாட்சியாக இருக்க முடியாது. கொடுங்கோன்மை மிக்கதாகவே அறிவாளர்களால் கருதப்படும். அப்படிக்கின்றி அறிவுடைமை இன்மையால்—சரியான முன்யோசனைகள் இல்லாமையால்—மொத்தத்தில் ஆளும்திறமையின்மையால் மக்களது உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புக் கெட்டுவிடுகிறது என்றால், ஆளுவதுஎத்தகைய ஆட்சியென்று பெயரிட்டுக் கூறவே தெரியவில்லை.

காங்கிரசார் நாடாள அரசுக் கட்டிலேறிய நாள் முதல் இந்தப் பத்தொன்பதாண்டுக்கால இடைவெளியில், இந்நாட்டு மக்களது உயிர் பலவழிகளில் பறிக்கப்பட்டுள்ள சோகவரலாற்றை நினைத்துப் பார்க்கவே நெஞ்சு உறைந்துபோகிறது.

கிடைக்கின்ற ஊதியத்தால் அரை வயிற்றை நிரப்பிக்கொள்ள வழியில்லை; ஊதியத்தை உயர்த்திக் கொடு—என்று கேட்டால் துப்பாக்கிச் சூடு; உயிர் பறிக்கப்படுகிறது.

இதனைப்பெறுவதுஎங்கள்பிறப்புரிமை; பெறவேண்டிய இந்த ஒன்றைப் பெற முடியாமல் தடுக்கும் அந்த ஒன்றை நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம் — வழிவிடமாட்டோம் என்று உரிமைக்காகக் குரலெழுப்பி

(15-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

உறுமும் புலி, சீறிடும் நாகம், துரத்திடும் ஓநாய், இவைகளை எதிர்த்திட வேண்டும் என்ற உணர்வு பெறுவது கடினமல்ல. இவைகளால் ஆபத்து ஏற்படும் என்பது எளிதாகப் புரியக்கூடியது.

கொத்தவரும் வல்லூறு, வட்டமிடுவது கண்டதும் மாடப்புறா தப்பித்துக்கொள்ளத் துடியாய்த் துடிக்கிறது. ஆனால், வலையை வீசிவிட்டு, வரகரிசி தெளித்து வைத்துப் பிடித்திட முனைபவனைக் கண்டால் அப்படியா அஞ்சிப் பறந்தோடுகிறது? இல்லையல்லவா!

## தம்பி உடையான்!

சீறிடும் பாம்பு கண்டால் ஓடோடித் தப்பித்துக்கொள்ளவோ, தடிகொண்டு அடித்துப் போடவோ முனைகின்றனர். ஆனால், பச்சைப் பாம்பு இருக்கிறதே, அது சீறுவது இல்லை; கண்ணுக்குப் பயங்கரமாகத் தெரிவதுமில்லை; பச்சைக் கொடியுடன் பின்னிக் கிடந்திடும்போது, பாம்பு என்று கண்டறியக்கூட இயலுவதில்லை; ஆகவே அச்சம் எழாது; ஆபத்து இருக்கிறது என்பதனை அறிந்திட இயலாது. என்ன அழகான கொடி! கவர்ச்சி மிக்க பச்சை நிறம்! — என்று ரசித்துக்கொண்டிருக்கத் தோன்றுமேயன்றி, அச்ச உணர்ச்சி எழாது. அந்த நிலையில், அருகே நெருங்குவான்! பச்சைப்பாம்பு கொத்திவிடும்! அப்போது தான் அலறித்துடித்திடுவான், ஐயோ! பச்சைக்கொடி என்று எண்ணிக்கொண்டிருந்தேன் பச்சைப் பாம்பல்லவா கொத்திவிட்டது!!—என்று கதறுவான். அல்லவா?

அதுபோலவே தம்பி! கண்டதும் கடுங்கோபம் கக்கி, பற்களை நறநறவென்று கடித்து, காட்டுக் கூச்சலிட்டு, கழுத்தினில் அடித்திடும் கயவனும் உண்டு, கனிவு காட்டி, புன்னகை உதிர்த்து, அருகே அழைத்து, உணவளித்து, அதிலே நஞ்சிட்டு உயிர்பறிப்பானும் உண்டு.

முன்னவனைக் கண்டதும் தன்னாலேயே ஒரு எச்சரிக்கை உணர்வு வந்திடும்; மற்றவனைக் கண்டாலோ ஒரு மயக்கம் மேலிடும்.

கிணற்றினில் இறங்கவேண்டிய நிலை ஏற்படும்போது, காலைப் பதமாக ஊன்றிக் கொண்டு, வழுக்கி விழுந்துவிடாமல் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளத் தோன்றும். பச்சைப்பட்டு விரித்ததுபோன்ற தோற்றமுள்ள பாதையிலே நடந்திடும்போது, ஒரு அலட்சியப்போக்கு தன்னாலே வந்து சேர்ந்திடும்.

படுகுழி வெட்டி, அதனைப் பசுந்தழை கொண்டு மூடிவைத்திருந்திடின் — அந்தப் பாதையில்—வீழ்ந்து வேதனை அடைந்த பிறகே படுகுழி! என்பது புரியும்.

கரத்தினில் அரிவாள் தூக்கிக்கொண்டொருவன் எதிரே வரக்கண்டால், எச்சரிக்கையாக இருந்திடத் தோன்றும்! அறுத்தெடுத்த கதிருடன் வந்திடின்? அருகே அவன் வந்திடும்போதுகூடப் புன்னகை செய்திடத் தோன்றும், இயல்பு.

வெள்ளையர்கள் இந்த நாட்டைச் சுரண்டுவதனைக் கண்டதும், எல்லா மக்களுக்கும் ஒரு எரிச்சலுணர்ச்சி, எதிர்ப்புணர்ச்சி, தானாக வந்தது.



# பாராள்வோர் போக்கு பச்சைப்பாம்பு! பார்க்கப் பசுமைதான்! பாய்ந்துவிட்டால்தம்பி...

அவன் நடை உடை பாவனையும், அவன் அனுபவித்து வந்த மந்தகாச வாழ்வும், அவன் பேச்சிலே நெளிந்த ஆணவமும், எளிதாகப் புரிந்தது; இவன் நமக்கு எதிரி என்ற உணர்வு பீறிட்டுக் கிளம்பிற்று.

உறுமும் புலியை, சீறும் நாகத்தைக் கண்டதும், ஆபத்து! ஆபத்து! என்று உணர்வு பிறந்திடுவது போல, எல்லாவகையாலும் நம்மிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டவனும், எல்லாத் துறைகளிலும் நம்மீது ஆதிக்கம் செலுத்துபவனுமாக இருந்துவந்த வெள்ளையரிடம் எதிர்ப்புணர்ச்சி இயல்பாகவே ஏற்பட்டுவிட முடிந்தது.

அன்னியன்—என்ற நிலையே, அகற்றப்படவேண்டியவன் என்ற உணர்வை ஊட்டிற்று. பாம்பு என்று கண்டவுடன், அடித்துப் போட்டிடவேண்டும் அல்லது அதனிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாவதுபோல. ஆனால் பச்சைப்பாம்பு, பசுமை மிக்க செடி கொடியுடன் ஒட்டிக் கொண்டிருந்திடின்?

வெள்ளையராட்சியும் அதனால் விளைந்த வேதனையும் சீறிடும் நாகம் அல்லது பாய்ந்திடும் புலிபோன்றிருந்தது; நம்மவர்களே நம்மை ஆளும் நிலையில், அவர்கள் மூட்டிவிடும் வேதனை, பச்சைப் பாம்புபோல் கொடியுடன் கொடியாக சுற்றிக்கொண்டிருப்பதால், எளிதிலே விளங்குவதில்லை; அது தீண்டும் வரையில்! தீண்டிய பிறகும் அதனை எளிதாகக் கண்டறிய முடிவதில்லை. கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் தோற்றத்தில் உடனடியாகக் கண்டுபிடித்திடத்தக்க மாற்றம் இராததால். எனவேதான், சுயராஜ்யத்தின் பேரால் வேதனைகள் மூட்டப்படும்போது, எளிதாக உணர்ந்து தீவிரமாக எதிர்த்து, துரிதமாக அதனை ஒழித்திட முடிவதில்லை.

ஆனால், நம்மவர்கள் என்பதாலேயே அவர் கரம் பட்ட நஞ்சு உயிர் குடித்திடாமலிருக்குமா! அன்பனே! வருத்தப்படாதே! நெருப்பிலே தூக்கிப்போட இருக்கிறேனே என்று எண்ணி வேதனைப்படாதே! இது சாதாரண நெருப்பு அல்ல! கள்ளியும் சுள்ளியும் போட்டு மூட்டப்பட்ட நெருப்பல்ல. அசல் சந்தனக் கட்டை!! நெருப்புதான்! ஆனால் அருமையான நறுமணம்! கவனித்தனையா! பைத்தியக்காரா! நெருப்பிலே தள்ளுகிறார்களே என்று எண்ணியா வேதனைப்படுவது! சந்தன மணம்! இந்தவிதமான நெருப்பூரில் நம்மை அனுப்புகிறார்களே என்று மகிழ்ந்திட வேண்டாமா!!—என்று அக்ரமம் பேசினால், ஆமய்யா! ஆம்! நறுமணம்! என்று கூறிவிட்டு, ஓ! என் சோதரரே! காணீர் என்னை! சந்தனக் கட்டைகளை அடுக்கித் தீயிட்டு, அதிலே என்னை இருந்திடச் செய்துள்ளனர்!! என்று மற்றவரிடம் கூவிக் கூறிடுவர். பித்தரும் கூறார்.

ஆனால் நம்மவர்களே ஆட்சி நடத்தும்போது, நமக்குக் கேடு பயக்கத் தக்கனவற்றினைச் செய்திடுவது கண்டு, நாம் சீறிப் பேசினால், ஆளவந்தார்கள் என்ன செப்புகின்றனர்.

நானா உன்னைக் கெடுத்திடுவேன்!

என்னையா நீ எதிர்ப்பது?

உனக்கு எது நல்லது என்பது எனக்கா தெரியாது!

என்று பேசுகின்றனர்; குரலிலே கடுமை கலவாமல், விழியிலே கனிவு கூட்டி! மயங்கிடத் தோன்றும். மயங்குகின்றனர் பலர். பச்சைப் பாம்பு கொடியுடன் பிணைந்து கொண்டிருப்பதனை அறிய முடிவதில்லையல்லவா, அதுபோல அவர் பேசும் மொழியிலே உள்ள பாகு, நஞ்சு கலந்தது என்பதனை உணர்ந்திட முடிவதில்லை.

ஆகவேதான், வெள்ளையர்மீது பாய்ந்திட முடிந்ததுபோல கேடு செய்யும் நம்மவரின் போக்கின்மீது பாய்ந்திட முடியவில்லை, பலருக்கு.

பச்சைப்பாம்பு பார்வையில் எளிதிலே படாது. நம்மவர் ஆட்சியின் கேடுகள் பலருடைய பார்வையிலே படுவதில்லை.

கேளேன் ஆளவந்தார் பேசுவதை! ஏழையே! உன்னை வாழவைக்கவே நான் அரும்பாடு படுகிறேன்! உன் தலையிலே எண்ணெய் இல்லை! என் கண்களிலே பார், கசிகிறது, உருக்கம்; வேதனை!! உன்னை வாழவைத்திடத்தான் திட்டங்கள்!!

பலருக்கு மனமயக்கம் ஏற்பட்டு விடுவது கண்டு வியப்படைய என்ன இருக்கிறது.

ஆனால் அந்த மயக்கத்தைத் தம்பி! நாம் பெரும் அளவுக்குப் போக்கிவிட்டிருக்கிறோம். ஆளவந்தாருக்கு நம்மீது ஆத்திரம் அதிக அளவில் இருப்பது அதனால்தான்.

நம்மவர்கள்—ஆகவே நல்லவர்கள்! என்ற ஒரு மயக்கத்தை ஊட்டிவைத்திருந்தோம், பாவிப் பயல்கள், நம்ம வீட்டு நெருப்பு என்றால் சுடாதா அப்பா! என்றும், நம்ம கொல்லையில் உள்ள கிணறு என்றால், இடறி விழுந்தால் உயிர் போகாமலா இருந்திடும்! என்றெல்லாம் கேட்டுக் கேட்டு, மயக்கத்தைத் தெளியவைத்துவிட்டனரே, என்று எண்ணுகிறபோதே அவர்களுக்குக் கோபம் 'குபுகுபு'வெனக் கிளம்பத்தானே செய்யும். அதைத்தான் காண்கின்றோம்.

**நம்மவர்கள்!** — கவர்ச்சிகரமான சொல், தம்பி! சுவை மிக்கதுகூட!! ஆனால் 'நம்மவர்கள்' என்று உறவு கொண்டாடுவோர் ஒருவரை ஒருவர் வீழ்த்த வல்ல பகைவர்களாக இருந்திடின்!

இன்று இந்த சுவையூட்டும் மயக்க மொழியை ஆளவந்தார் பயன்படுத்தும்போது,

கழனியில் காயும் வெயிலில் உழைக்கின்றானே கந்தன் அவனுக்காகவா அல்லது காட்டூர், மோட்டூர், [illegible]டூர், என்று பலப்பல

பண்ணைகளை அமைத்துக்கொண்டு பல கந்தன்களை மாடாக உழைக்கச் செய்து, மந்தகாச வாழ்வு நடத்துகிறானே **பவுனப்பன்,** எனும் சீமான், அவனுக்காகவா!

யாருக்காக இந்த அரசு? அது விளக்கமானால்தான், இந்த 'நம்மவர்' என்பதிலே நல்ல பொருள் கிடைக்கிறதா, அல்லது தீயது உள்ளடங்கிக்கிடக்கிறதா என்பது புரியும்.

அதனைத்தான் நாம் புரியவைத்துக்கொண்டிருக்கிறோம்.

இனியுமா இதிலே உங்களுக்குச் சந்தேகம், இந்த அரசு ஏழைகளுக்காகத்தான்; இல்லாமையை ஒழித்திடத்தான் என்று பேசுகின்றனர் பெரியதலைவர்கள்; பெரிய இடத்தைப் பிடித்துக்கொண்டவர்கள்.

ஏழை முன்னேறிவிட்டான், அவன் வாழ்விலே 'வசந்தம்' வீசுகிறது!—என்று கூறினர் துவக்கத்தில்; துணிந்து.

ஏழை அரிஜனங்களுடைய வீடுகளிலே இப்போதுதான் வெள்ளிப் பாத்திரங்கள் பளபளவென்று தெரிகின்றன என்றே கூறிப் பூரிப்புப் காட்டினார் ஒரு அமைச்சர்.

வேலைவாய்ப்பு அதிகமாகிவிட்டிருக்கிறது, கூலி உயர்வு கிடைத்திருக்கிறது, வாழ்க்கை வசதி செய்து தரப்பட்டிருக்கிறது, எல்லாம் எமது ஆட்சியின் திறமை காரணமாக என்று கூறிக் களிப்பூட்டினர் சில காலம்.

புதிது புதிதாக எழுந்த தொழிற் கூடங்களைக் காட்டினர்; பாரீர் புதுக்கோலம்! அறிவீர் நாடு செழித்திருப்பதை!!—என்று பண் பாடினர்.

அதனால் ஏற்பட்ட மயக்கம் சிறிதுகாலம் கலையவில்லை; கப்பிக்கொண்டிருந்தது.

எட்டடுக்கு மாடிகளும், எழில்மிகு தோற்றமுள்ள மோடார்களும், புத்தம் புதுப் பொலிவும் கண்டனர் ஏழைகள்; நாடு முன்னேறி இருக்கிறது 'நம்மவர்' ஆட்சியில் என்ற பாட்டும் கேட்டனர். கேட்டுவிட்டு? கூரைபிய்ந்துபோன குடிசைக்குச் சென்றனர்! குமுறிடும் மனைவியைக் கண்டனர்! தேய்ந்துபோகும் குழந்தைகள் கூவிடக்கேட்டனர்; வறுமை எப்போதும்போல அங்கு ஆட்சி செய்திடக் கண்டனர், கலங்கினர்.

கூலி உயர்ந்துதான் இருந்தது. ஆனால், விலைகளோ அதனைவிட அதிக அளவிலும் வேகத்திலும் உயர்ந்துபோயிருக்கக்கண்டனர்; வாழ்க்கைச் செலவு சுமையாகித் தம்மை அழுத்துவதைக் கண்டனர்.

புதிய புதிய யந்திரங்கள் அமைத்தனர்; கண்டனர்; வெள்ளையர்போலாகிவிட்ட தமது முதலாளிமார்களையும் கண்டனர்; 'நம்மவர்' என்ற உணர்ச்சி கூட எழுந்தது, ஆனால் நமதுஇல்லை, என்பதுபற்றிய எண்ணம் எழுந்ததும் பந்தபாச உணர்ச்சி மெள்ள மெள்ள உலர்ந்திடலாயிற்று.

புதிய ஆட்சி! புதிய நிலைமை! புதிய பொலிவு! புதிய வலிவு! பொன்னொளி! பூங்காற்று! மெல்லிசை! மினுக்கு!—எல்லாம் கண்டனர்; அவையாவும் ஒரு சிலருக்கே, தமக்கு அல்ல என்பதனையும் உணர்ந்தனர்; உணர்ந்ததும், இந்த ஆட்சி நமக்காகவா என்ற ஐயப்பாடு தலைதூக்கிற்று; இல்லை இல்லை என்று உள்ளம் முணுமுணுத்தது, ஒலி வலுத்தது, உண்மை உரத்த குரலில் கூறிற்று, இந்த அரசு உனக்காக அல்ல என்று.

நாடு முன்னேற்றமடைய தீட்டப்படும் திட்டங்கள் வெற்றி அடையவேண்டுமானால், வயலில் வேலை செய்யும் உழவனும், தொழிற்சாலையில் வேலைசெய்யும் பாட்டாளியும் இந்தத்திட்டம் எனக்காக, "என்னை வாழவைக்க என்ற உணர்வுபெற்று உள்ளன்புடன் உழைத்திடவேண்டும் என்று தொழில் அமைச்சராக இருந்தபோது **சஞ்சீவய்யா** பேசினார். அந்த உணர்வு வரவில்லை. காரணம், உழைக்கிறான், உற்பத்தி பெருகுகிறது, இலாபம் குவிகிறது, முதலாளிமார்கள் கொட்டமடிக்கிறார்கள், இவனோ எப்போதும்போல—இல்லை—இல்லை—முன்பு இருந்ததைவிட மோசமான நிலையில் நலிந்திடுகிறான். இந்த அரசு எனக்காக அல்ல—என்னைக் கசக்கிப் பிழிந்து இலாபம் பெற்றிடும் முதலாளிகளுக்காக என்று கூறிடலானான்; ஒரு கசப்புணர்ச்சி அவன் உள்ளத்தைக் கப்பிக்கொண்டது; எத்தனைத் தித்திப்புத் தடவியபோதிலும் அந்தக் கசப்புணர்ச்சி போக மறுக்கிறது.

> இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவு விலைகள் ஏறியிருப்பதால், கூலி உயர்ந்தும் தன் வாழ்க்கையில் குளிர்ச்சி ஏற்படவில்லை என்பதறிந்து இதற்குத்தானா இந்த அரசு! இதுநமக்காக அமைந்த அரசா? என்றுகேட்கலானான். துப்பாக்கிதான் பதில் அளித்தது!!

வெள்ளையராட்சிக் காலத்திலே இல்லாத துணிவு முதலாளிகளுக்கு ஏற்பட்டது! ஏனெனில், தொழிலாளி தன் நிலையை உயர்த்திக்கொள்வதற்காக எந்தக் கிளர்ச்சி நடத்திட முயற்சித்தாலும், ஆயுதம் தாங்கிய போலீஸ் படை முதலாளிகளின் ஆதிக்கத்தைக் காத்திட, தொழிலாளியின் கிளர்ச்சியை முறித்திட முனைந்தது.

> இந்த அரசு நமக்காக அமைந்தது அல்ல; இது முதலாளிகளுக்காக அமைந்த அரசு, என்ற உண்மையை, தொழிலாளியின் உடலிலிருந்து ஒழுகியஇரத்தமும், கண்களிலிருந்து வடிந்த கண்ணீரும் உணர்த்தின.

காங்கிரசாட்சியில் பணக்காரன் மேலும் பணக்காரனாகிறான்; ஏழை மேலும் ஏழையாகிறான் என்ற கருத்து பரவலாயிற்று. ஆட்சிப் பொறுப்பில் இருந்தோர், முதலில் இதனைப் பலமாக மறுத்தனர்; கடுமை

## "நம்மவர்" ஆட்சிதான் நாட்டைக் கெடுத்தது!

யாகக் கண்டித்தனர், இத்தகைய கசப்புணர்ச்சியை மூட்டிவிடுபவர்களை.

ஆனால் ஆய்வாளர்கள் கண்டறிந்துகூறினர், 100-க்கு அறுபது குடும்பத்தினர் பஞ்சத்தின் பிடியில் உள்ளனர்; பசிநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்,

விலைவாசிகள் விஷம்போல ஏறிவிட்டிருப்பதையும், கூலி உயர்வு என்பது பணத்தின் அளவிலேயே தவிர, பண்டத்தின் அளவிலே அல்ல என்பதையும்,

பணத்துக்கு உள்ள வாங்கும் சக்தி தேய்ந்துபோயிருப்பதையும்,

பாட்டாளிகளின் கடன்சுமை அதிகமாகி விட்டிருப்பதையும் வேலையில்லாத் திண்டாட்டம் விரிந்துபோய்க்கொண்டிருப்பதையும்.

எதனைத் தொழிலாளரும் உழவர்களும் நடுத்தரக் குடும்பத்தினரும், தமது கண்ணீராலும் பெருமூச்சாலும் எடுத்துக்காட்டி வந்தனரோ, அதனை ஆய்வாளர்கள் புள்ளிவிவரங்களாக்கித் தந்தனர். இந்த நாட்டு ஆய்வாளர்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து இதற்காகவே அழைக்கப்பட்டிருந்தவர்களும்.

அந்த ஆய்வாளர்கள் அதேபோது, மற்றும் சில உண்மைகளையும் எடுத்துக் காட்டினர்.

வரிச்சுமை அதிகமாகிவிட்டிருக்கிறது: ஏழையை அழுத்துகிறது என்பதையும்,

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிசுகல்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

‘கருங்குரங்கு ரஸாயனம்’
மற்றும்
‘மதுகாசவம்’

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

நோட்டுகளைக் கண்மூடித்தனமாக அச்சடித்துப் பரப்பி, பண வீக்கத்தை சர்க்கார் உண்டாக்கிவிட்டார்கள் என்பதையும்,

நாணயத்தின் மதிப்பு தேய்ந்துவிட்டு இருப்பதையும்,

உலகின் நாலுபக்கங்களிலும் கடன் வாங்கி வாங்கி, நாட்டின் எதிர்காலத்தை அடகுவைத்துவிட்டிருப்பதையும் எடுத்துக் காட்டினர்.

இந்தக் கேடுகளில் ஏதேனும் ஒன்றைச் செய்தால் கூடப் போதும், மக்கள் சீறி எழுந்து அந்த அரசு நடாத்துவோரை விரட்டி விட்டிருப்பர்; பிற நாடுகளில்.

இந்தப் புண்ணிய பூமி அவ்வளவையும் தாங்கிக் கொண்டது; பொழுது புலரும், புது வாழ்வு மலரும் என்ற நம்பிக்கையை அணைத்துக் கொண்டபடி.

மற்றவர்கள் — குறிப்பாக எதிர்க் கட்சியினர்— இந்தக் கேடுபாடுகள் குறித்துச் சுட்டிக் காட்டிய போது சீறி விழுந்த ஆளவந்தார்கள், ஆய்வாளர்களே இடித்துரைக்கத் தலைப்பட்டதும், சிரம் கவிழ்த்துக் கொண்டனர்; மெள்ள ‘ஆமாம்’ என்று கூறினர்.

ஆய்வாளர்கள் மற்றும் ஓர் உண்மையையும் எடுத்துக் காட்டினர். இத்தனைக் கேடுபாடுகள் நெளிகின்ற நிலையில், நாட்டிலே தொழில் வளர்ந்திருக்கிறது, உற்பத்தி பெருகி இருக்கிறது செல்வம் வளர்ந்திருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டினர்.

இஃது விந்தையன்றோ என்று கேட்டனர் மக்கள். செல்வம் வளர்ந்திடின் சீர் வளர்ந்திடும், தொழில் வளம் பெருகிடின் விலை குறைந்திடும்—இது பொது உண்மை. விளைச்சல் மிகுந்திடின் களஞ்சியம் நிரம்பிடும், மழை பெய்திடின் பூமி குளிர்ந்திடும், மலர் பூத்திடின் மணம் பரவிடும் என்பதுபோன்ற பொது உண்மைகள். ஆனால் இங்கோ தொழில் வளர வளர தொழிலாளர் துயரம் வளருகிறது; உற்பத்தி பெருகப் பெருக விலைகள் ஏறியபடி உள்ளன; செல்வம் வளர வளர வறுமை பரவுகிறது. காரணம் என்ன இந்த வேதனை நிரம்பிய விந்தைக்கு.

அதுதான் எனக்கும் புரியவில்லை;
விளைந்த செல்வம் எங்கே போய்விட்டது?
என்று கேட்டிடலானார் காமராஜர்.

நல்லவர்! ஏழைபங்காளர்! திறமை மிக்கவர்! காலம் தந்திட்ட கருவூலம்! காமராஜர்!!—இவர் மட்டும் இத்தனை ஆண்டுகள் இங்கு இருந்திருப்பின் இந்த இடர்ப்பாடு வந்தே இருக்காது; ஏழைக்கு வேதனை மூண்டிருக்காது. அவரோ, பாவம், கானடா நாட்டு அரசியலைச் செப்பனிடவும் அமெரிக்க நாட்டு தொழில் வளப் பெருக்கத்துக்கான வழி கூறிடவும், சந்திரமண்டலம் யாருக்கு என்பதற்காக ரஷியாவும் அமெரிக்காவும் மோதிக்கொள்ளாதிருக்க ஒரு சமரசத் திட்டம் தந்திடவும், தமது நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டுக் கொண்டு, காலையில் மாஸ்கோ மாலையில் இலண்டன், மறுநாள் வாஷிங்டன், அதற்கு அடுத்த நாள் ஆட்டவா என்று பயணம் நடத்திக்கொண்டிருந்துவிட்டார்; அதனால் இந்த அவதி இங்கு ஏற்பட்டுவிட்டது என்றுவது கூறி ஆறுதல் அடையலாமா என்றால், முடியவில்லை, பெரியவர் இங்கேயேதான் இருந்துவந்தார்,

# முற்பகுதி இனிக்கிறதாம்! பிற்பகுதி கசக்கிறதாம்!

பெரிய இடத்திலே தான் இருந்துவந்தார். அவர் கண் முன்பாகத்தான் இத்தனையும் நடைபெற்றது,

எட்டு ஆண்டுகள் அல்லவா அவர் முதலமைச்சராகக் கொலுவீற்றிருந்தார்!

இருந்து? இப்போது அவரும் கேட்கிறார், முத்தன் ...ணியன்போல, வளர்ந்த செல்வம் எங்கே போய்விட்டது என்று!

இந்த நாடு தவிர வேறு எந்த நாடும் இந்த விந்தையைத் தாங்கிக் கொள்ளாது.

ஆய்வாளர்கள் தெளிவளிக்க மீண்டும் முன்வந்தனர்.

**மகலனோபிஸ்** குழுவினரின் அறிக்கை வெளிவந்தது.

செல்வம் எங்கெங்கு சென்று முடங்கிக் கொண்டது என்பது பற்றிய விளக்கம் அளித்தது.

ஏகபோகமாகப் பொருளாதார ஆதிக்கம் செலுத்துபவர் பற்றியும் ஒரு தனிக் குழு தனி அறிக்கை கொடுத்தது.

இனியும் மறைக்கப் பயனில்லை என்று கண்டு கொண்ட ஆளவந்தார்கள், இப்போது முற்பகுதியை ஒப்புக்கொள்கிறோம், பிற்பகுதியை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

காங்கிரசாட்சியில் பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகிறான்.

என்ற முற்பகுதியை ஒப்புக்கொள்கிறார்களாம்; பெருந்தன்மையுடன்!!

ஏழை மேலும் ஏழை ஆகி இருக்கிறான்.

என்ற பிற்பகுதியை ஏற்றுக்கொள்ள மாட்டார்களாம்! ஏன் என்று கேட்காதீர்கள். ஏதோ பெரிய மனது வைத்து, இவ்வளவு இடிக்குப் பிறகு ஒரு பகுதியையாவது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா! மகிழத்தானே வேண்டும். அந்தப் பகுதியையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டால், மக்கள் என்ன செய்துவிடப் போகிறார்கள்? இது என்ன பிரிட்டனா, அமெரிக்காவா இப்படி ஒரு அரசா என்று கொதித்தெழுந்து, அந்த அரசினை வீழ்த்திட.

இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்ன?

ஆட்சியில் இருந்த நீங்கள் ஏன் இந்த நிலை ஏற்படுவதைத் தடுக்கவில்லை?

நிலைமை இவ்விதம் வடிவம்கொள்வது புரியவில்லையா?

புரியவில்லையென்றால் என்ன காரணத்தால்?

புத்தித் தெளிவு இல்லாததாலா? அல்லது மமதை காரணமாகவா?

புரிந்தும் நிலைமையைச் சீர்திருத்தவில்லையென்றால், முயற்சித்து முடியாமற் போய்விட்டதா?

ஆமென்றால், இந்த அளவு திறமை இல்லாத நீங்கள் ஏன் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கவேண்டும்? என்றெல்லாம் கேட்பர்; அங்கு!

இங்கு? அச்சம் பிடித்தாட்டும் நிலை சிலருக்கு! 'நம்மவர்கள்' ஆயிற்றே என்ற மயக்க உணர்ச்சி சிலருக்கு!!

அந்த அச்சத்தையும் மயக்கத்தையும் போக்கிடும் முயற்சியில் நாம் ஈடுபட்டு பெரும் அளவு வெற்றி கண்டிருக்கிறோம்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சியிலே அமர்ந்திருப்பவர்கள் 'நம்மவர்கள்' என்பதாலேயே, அது நமக்காக உள்ள ஆட்சி என்றோ நல்ல ஆட்சி என்றோ கூறிவிடுவதற்கு இல்லை என்பதனை நாடு அறிந்திடச் செய்திருக்கிறோம்.

கொடியிலே பச்சைப் பாம்பு சுற்றிக் கொண்டிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

பச்சைப் பாம்பு இருப்பதைக் கண்டறிவது எவ்வளவு கடினமோ அதனைவிட அதிகக் கடினம், அதனை அடித்துப் போடுவது, ஏனெனில் அது, நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மறையும் ஒளியும். கொடியுடன் கொடியாக அசைவற்று இருக்கும்.

## பட்டியலும் அட்டவணையும்

| | |
|---|---|
| * பம்பாயில் இரண்டு இரயில்கள் ஒன்றை ஒன்று மோதிக்கொண்ட வகையில் இறந்தவர் தொகை - 'மெயில்' இதழ் வெளியிட்டுள்ளபடி | 70 |
| இதழ்களில் வந்துள்ள செய்திப்படி இறந்தவர்கள் தொகை | 67 |
| காயமுற்றோர் எண்ணிக்கை :- | |
| 'இந்து' இதழில் | 201 |
| 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில் | 166 |
| • பீகார் மாநிலத்தில் வெயில் கொடுமைக்குப் பலியானோர் | 313 |
| ஆனால் பாட்னா மயானம் ஒன்றில் அலுவல் பார்க்கும் விறகுக் கடைக்காரர் தரும் எண்ணிக்கையின்படி | 400 |
| * வயிற்று நோய் காரணமாக இந்தக் கோடையில் இதுவரையில் ஆக்ராவில் இறந்துள்ள பள்ளிச் சிறுவர்கள் எண்ணிக்கை | 100 |
| இங்குள்ள மருத்துவ மனையில் இதே நோயினால் நாளொன்றுக்கு இறப்போர் எண்ணிக்கை | 3 |
| • வெள்ளத்தினால் அசாம் மாநிலத்தில் பாதிக்கப்பட்டோர் - 'இந்து' இதழின் கணக்குப்படி | ஒன்றரை இலட்சம் |
| 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழின் கணக்குப்படி | 6 இலட்சம் |

'நம்மவர்கள்' நடாத்திடும் ஆட்சியை மாற்றி அமைத்திட முனையும்போது; இதனை நன்கு நினைவிற் கொள்ளவேண்டும்.

மக்களுக்குத் தெளிவளிக்க, 'நம்மவர்' நடாத்திடும் ஆட்சியின் உண்மையான போக்கினை எடுத்து விளக்கிட நாம் கடினமாக உழைத்ததால் பலன் கண்டோம் என்பதுடன், காங்கிரசில் இப்போது குடியேறியுள்ளவர்களின் பட்டியலே, பொது மக்கள் மனதில் தெளிவு வளர வழி செய்துவிட்டிருக்கிறது.

இது ஏழைக்காக அமைந்துள்ள அரசு என்று பெருந்தலைவர்கள் பேசி முடிந்ததும், மக்கள் எவரெவர்களைக் காண்கின்றனர், மேடை மீது!

ஏழைகள் இந்த அளவுக்கு வளர்ந்திட யார் காரணமாக உள்ளனரோ அவர்களை!!

யாரார் ஊர் நிலத்தைத் தமது உடைமையாக்கிக் கொண்டு, உழுபவனைக் கூலியாக்கி விட்டனரோ அவர்களை!

யாரார் போட்ட முதலுக்கு ஒன்றுக்குப் பல பத்து இலாபமாகக் குவித்துக்கொண்டு, தொழிலாளி கூலி உயர்வு கேட்டால், கதவை அடைத்து விடுகிறார்களோ அவர்களை

யாரார் கள்ளக் கடத்தல், கணக்கில் வராத பணம் ஆகியவற்றினுக்கு அதிபர்களோ அவர்களை.

யாரார் இலஞ்சம் வீசி, அதிகாரிகளில் சிலரையும்கெடுத்து நிர்வாகத்தைப் பாழாக்குகின்றார்களோ, அவர்களை!

முழங்குக முத்தமிழ்! தோற்றம்: 1961

# பைந்தமிழ்க் கல்லூரி

**நேருஜி நகர், திருச்சி ரோடு.**
**திண்டுக்கல், (மதுரை மாவட்டம்)**

**மாணவ, மாணவிகளுக்கு அரிய வாய்ப்பு!**
**மாணவர் சேர்க்கை Admissions நடைபெறுகின்றன!**

S. S. L. C. தவறியவர்களும், படித்தவர்களும் அதற்குச் சமமான படிப்புள்ளவர்களும், பயிற்சிப் பள்ளிகளில் இடம் இல்லையே என்று வருந்துகின்றவர்களும் இங்கு படித்துப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றுத் தமிழாசிரியர்களாகி B. A. B. T. மாத வருமானம் (துவக்கமே ரூ. 205க்கு மேல் அடையலாம். மாணவ, மாணவியர் தங்கிப் பயிலத் தனித்தனியே பாதுகாப்புள்ள குருகுலங்கள் (Hostels) உண்டு. நேரில் வந்து சேர்ந்துகொள்ளலாம்.

தனிப்படத் (Private) தேர்வு எழுதும் ஆசிரிய ஆசிரியைகட்குப் புத்தகங்களை வாங்காத நிலையில் தெளிவாகப் பாடக் குறிப்புகள் அஞ்சல் வழி அனுப்பப்படும்.

ரூ. 5-00 M.O.வுடன் விண்ணப்பிக்க. M.O. இன்றி வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

முதல்வர்: (Principal)
**வித்துவான், இரா. இளையநம்பி**
துணை முதல்வர்: (Vice Principal)
**பண்டிதை, நாகலக்குமி அம்மையார்**
மேலாளர் & காவலர் (Manager & Wardan)
**திருவாட்டி, R. பாக்கியம்**

யாரார் ஒரு தொழிலை நடத்தி அதனால் கிடைத்திடும் இலாபத்தைக் கொண்டு ஒன்பது புதுத் தொழில் துவக்கி மேலும் பணம் குவித்துக் கொள்கிறார்களோ அவர்களை!

யாரார் வருமானவரி கொடுக்காமல் சர்க்காரை ஏய்த்துவிட்டு காங்கிரசின் தேர்தல் நிதிக்கு நன்கொடை கொடுத்துப் பெரியவர்களின் புன்னகையைப் பெற்று, அதனைத் துணைகொண்டு புதிய அக்ரமங்களைத் துணிவுடன் செய்திட முற்படுகின்றனரோ, அவர்களை!

எதிர்க்கட்சிகள் என்ன பிரசாரம்செய்து ஏழைகளை விழிப்படையச் செய்தாலும், பணத்தை வீசிப் பாமரரை மயக்கிட முடியும் என்ற கணக்குக்கூறுபவர்கள் யாராரோ அவர்கள்!

அவர்கள் 'புடைசூழ'த்தான் பவனி வருகின்றனர், ஏழை பங்காளர் யாமே என்ற விருது தேடிக்கொண்டுள்ள ஆளவந்தார்கள்.

'அவர்களை'க் கண்டதும் மக்களுக்கு நிலைமை மிக நன்றாகத் தெரிந்துவிடுகிறது. அதனால் தம்பி! நமது வேலையும் ஓரளவு எளிதாகிவிடுகிறது.

அவர் காங்கிரசிலா?

இவர் கூடவா, காங்கிரஸ் கட்சியில்?

அவர் எப்போது காங்கிரசில் சேர்ந்தார்?

இவரை எப்படிக் காங்கிரசில் சேர்த்துக் கொண்டார்கள்?

இவர்களெல்லாமா இருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியில்?

இவர்களுக்குத்தானா இருக்கிறது காங்கிரஸ் கட்சி?

இவர்களைக் காட்டித்தானா காங்கிரசை ஆதரிக்கச் சொல்கிறார்கள்?

தம்பி! ஊரார் இதுபோலத்தான் பேசிக்கொள்கிறார்கள், 'அவர்கள்' புடைசூழ காங்கிரசின் பெருந்தலைவர்கள் பவனிவரக் காணும்போது.

தம்பி! கொட்டு முழக்குடன், கோவிந்தா எனும் ஒலியுடன், மஞ்சள் ஆடை அணிந்து, வலம் வருகிறது ஒரு 'கோஷ்டி'

பக்திமிக்கவர்கள், திருப்பதி செல்கிறார்கள், அவர்கள் ஏந்திவரும் உண்டியலில் நம்மாலானதைப் போட்டால் நமக்குப் புண்ணியம் வந்துசேரும் என்று எண்ணிக்கொண்டு, அன்றையச் செலவுக்காக வைத்திருக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு ஓட்டம் பெருநடையாய் வருகின்றனர்.

அருகே வருகிறது ஊர்வலம்! பார்த்தால், யார் தெரிகிறார்கள்?

கன்னக்கோல் சின்னப்பன், காதறுத்த மல்லப்பன், குத்திக்குடலெடுத்த குமரப்பன், இப்படிப்பட்ட பேர்வழிகள்!

உண்டியில் பணம்போட மனம் வருமா! இந்தப் பாவிகளா! இந்த வேடத்திலா! மஞ்சள் ஆடையை கட்டிக்கொண்டால், மயங்கிவிடுவோம் என்று எண்ணிக்கொண்டார்களா? ஏமாந்த நேரத்தில் நடத்தியது போதாது என்று இப்போது பட்டப்பகலிலேயே வேட

மிட்டுப் பொருள்பறிக்க வந்தனரோ, பாவிகள் என்று மனம் குமுறிக்கிடப்பர்.

'அவர்கள்' புடைசூழ காங்கிரசின் பெருந்தலைவர்கள் வருகிறபோது, மக்கள் அடையும் கசப்புணர்ச்சி இதுபோன்றதே.

> "பீகார் சட்டசபையில் கொண்டுவரப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டங்களை எல்லாம் விடாப்பிடியாக எதிர்த்துக்கொண்டு வந்திருக்கிறார் இந்த மகாராஜா. ஏதாவது தந்திரம் செய்து தன்உடைமையை, முதலாளித்தனத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார். பொய்யான ஏற்பாடுகள், போலியான தர்மஸ்தாபனங்கள் ஏற்படுத்திவைத்துக்கொண்டு, சட்டத்தையும் சர்க்காரையும் மோசம் செய்திருக்கிறார். மிகத் துணிந்த பேர்வழி! பேர்போன குற்றவாளி!!"

தம்பி! பீகார் மாநில முதலமைச்சர் **பிநோதானந்தா ஜா** என்பாருக்கு 1961-ல், பண்டித ஜவஹர்லால், **ராம்கர் ராஜாவைப்பற்றி** குறிப்பு அனுப்பினார்.

அந்த ராம்கர் ராஜா தமது 'கோஷ்டியுடன்' இப்போது காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார்.

ஜனநாயக சோஷியலிசமே என் பேச்சு—மூச்சு—என்று கூறிடும் காமராஜர், பண்டித ஜவஹரால் மிகக் கடுமையாகக் கண்டிக்கப்பட்ட அந்த ராஜாவைக் காங்கிரசில் சேர்த்துக்கொண்டார்.

பீகாரில், காங்கிரஸ் வெற்றி என்றால், அது இனி சட்டத்தையும் சர்க்காரையும் மோசம் செய்த பேர்வழி என்று பண்டித ஜவஹர்லால் நேருவால் கண்டிக்கப்பட்ட ராம்கர் ராஜாவின் வெற்றி என்றுதானே பொருள்படும்!

அதுதான் தம்பி! காமராஜர் காட்டும் ஜனநாயக சோஷியலிசம்!!

ராம்கர் ராஜாவுடன் சேர்ந்து ஜனநாயக சோஷியலிசம் உண்டாக்க, நம்மையும் அழைக்கிறார்! அது அல்லவா வேடிக்கை!!

ஆனால் மக்கள் தெளிவு பெற்றுக்கொண்டுவிட்டுள்ளனர். கொடி எது, பச்சைப் பாம்பு எது என்பது புரிந்துவிட்டது! இனி மக்களை மயக்கிட, ஏய்த்திட முடியாது என்பது விளக்கமாகிக்கொண்டு வருகிறது. மக்களின் இந்தத் தெளிவுக்குக் காரணம், அச்சமற்று, பணியாற்றிய என் தம்பிகளன்றோ என்று எண்ணும்போதே, **தம்பி உடையான் படைக்கு அஞ்சான்** எனும் கவிதை செவியினில் ஒலிக்கிறது, இதயத்தில் இனிமையைச் சேர்க்கிறது.

அண்ணன்,

அண்ணாதுரை


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

# ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

**(Recognised by Central Board of Indigenous Madicine Madras)**

பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடைவீதி, திருச்சி-8.
28 நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A கண்ணமமாள் கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

மாறுவேடத்திலிருப்பவன் குலசேகரன்தான் என்பதைப் புத்த விகாரத்திலேயே தான் தெரிந்துகொண்டதையும், ஆகவே அவனைப் பின்தொடர்ந்ததையும், பேசிய விவரங்களையும் அஞ்சலை சொன்னாள்.

"குலசேகரனா மாறுவேடத்தில் இங்கு உலவுகிறான்! இதென்ன பைத்தியக்கார வேலை! எதிரிகளிடம் சிக்கிவிட்டால், இவன் தலை இலங்கைக் கோட்டை மதிற்சுவரின் மீதல்லவா இருக்கும்?" என்ற சிந்தனையால் இரவு வெகுநேரமாகியும் அறிவொளி அடிகளுக்குத் தூக்கம் வரவில்லை.

அவரைப் போலவே புத்தவிகாரத்தில் படுத்திருந்த குலசேகரனுக்கும் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான்.

"நாம் எவ்வளவோ எச்சரிக்கையோடு இருந்தும் அஞ்சலைக்குத் தெரிந்துவிட்டதே! அவளும் அறிவொளி அடிகளும் தங்கமானவர்கள்! அவர்களால் எனக்கு ஒரு ஆபத்தும் வராது! அவளைப்போல வேறு யாராகிலும் என்னைத் தெரிந்துகொண்டிருந்தால்!" அதற்குமேல் சிந்தித்துப் பார்க்கக் கூட பயமாக இருந்தது.

தூக்கம் வராமல் படுத்துக்கொண்டிருந்தால், பயங்கர கற்பனைகள் எழும் என்ற எண்ணத்தோடு வெளியில் புறப்பட்டான்—தூக்கம் வரும்மட்டும் உலவிவிட்டு வரலாம் என்று.

புத்தபுரம் என்ற அந்த சிற்றூருக்கு மேற்கே ஒரு கல் தூரத்தில் இரண்டு குன்றுகளுக்கு இடையே ஒரு பெரிய ஏரி இருந்தது. பனை மரங்களும், பாக்குமரங்களும் நிறைந்த அந்த ஏரிக்கரையின்மீது நின்று பார்த்தால் அது ஒரு கடல் போலவே தோன்றும்.

ஏரியின் வடக்குக் கோடியிலிருந்த குன்றின் அடிவாரத்தில் குலசேகரன் நடந்து சென்றபோது யாரோ வேகமாகக் குதிரைமீது வருவதை அறிந்ததும் பக்கத்திலிருந்த வேங்கை மரத்தின் பின்னால் மறைந்து நின்றான்.

அவன் பதுங்கியிருந்த வேங்கை மரத்திற்குப் பக்கத்தில் அந்தக் குதிரை வந்து நின்றது.

குலசேகரனின் மனம் திடுக்கிட்டது. எவனோ நம்மைத் துரத்திக்கொண்டு வந்து மறைந்ததைப் பார்த்துவிட்டுப் பிடிக்க வருகிறான் என்று நினைத்தான்.

'ஒருகுதிரையின் குளம்படிச் சப்தம்தானே கேட்டது. ஆகவே வந்தவனும் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். அவன் அசகாய சூரனாகத்தான் இருக்கட்டுமே, நம் எதிரே நிற்க முடியுமா?' என்ற தைரியத்தோடு மெள்ள எட்டிப்பார்த்தான்.

குதிரை மீதிருந்து இறங்கியது ஆண் அல்ல, பெண் என்பதைக் கண்டதும் ஆச்சரியத்தில் அவன் மூழ்கிவிட்டான்.

அந்தப் பெண் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு எதிரே இருந்த பாறையின் வெடிப்பில் கையைவிட்டாள்.

அவள் செய்கை குலசேகரனின் ஆச்சரியத்தை இன்னும் அதிகமாக்கிற்று. ஆகவே உற்றுக் கவனித்தான்.

அந்த வெடிப்பிலிருந்து ஒரு ஓலையை வெளியே எடுத்தாள்.

அதை நிலவில் வெளிச்சத்தில் ஒரு முறை பார்த்துவிட்டு, இடையில் மறைத்து வைத்திருந்த வேறொரு ஓலையை எடுத்து அந்த இடுக்கில் வைத்துவிட்டுக் கையிலிருந்த ஓலையைப் படித்தபடி நடந்துவந்து குதிரையின் அருகே நின்றாள்.

ஆர்வத்தோடு அந்த ஓலையை அவள் படித்ததிலிருந்து அவளது காதலன்எழுதியதாகத்தான் இருக்க வேண்டுமென்று அவன் யூகித்துக் கொண்டான்.

"இவள் காதலன் யாரோ? இவள் யாரோ? இருவர் காதலுக்கும் என்ன தடையோ? பாவம் இப்படி அர்த்த ராத்திரியிலே வந்து காதலனுக்கு ஓலை வைப்பதும், அவனது ஓலையை எடுத்துப் பார்ப்பதுமாக இருக்கிறாள்!" என்று எண்ணிச் சிரித்தவனுக்குத் திடீரென்று தும்மல் வரவே, மிகவும் சிரமப்பட்டு அதை அடக்கினான். ஆனாலும் கொஞ்சம் சப்தம் வெளியே வந்துவிட்டது.

பூனையின் குரலைக் கேட்டதும், சிறகுகளை அடித்து எழும் கிளியைப்போல, அவள் குதிரைமீது தாவி ஏறினாள்.

குதிரைமீது இருந்தபடியே நாலாப் பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தாள். பக்கத்தில் ஒரு வெள்ளை முயல் ஓடுவதைக் கண்டதும், அவள் சிரித்துக்கொண்டே குதிரையை விட்டுக் கீழே குதித்து, எதிரே இருந்த ஒரு பாறையின் மீது உட்கார்ந்து திரும்பவும் ஓலையைப் படிக்க ஆரம்பித்தாள்.

அவளது சந்தேகத்தையும் பயத்தையும் தக்க நேரத்தில் வந்து பொய்யாக்கிய அந்த முயலை வாழ்த்தியபடியே, குலசேகரன் மரத்தின் பின்பக்கம் ஆடாமல் அசையாமல் நின்றிருந்தான்.

சிறிதுநேரம் கழித்து அவள் குதிரை மீதேறி, வந்த வழியே திரும்பிச் சென்றாள்.

அவள் வைத்த ஓலையை எடுத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. காதலி காதலனுக்கு எழுதிய ஓலையை அன்னியன் ஒருவன் படித்துப் பார்ப்பது முறையா என்ற தயக்கம் ஒரு கணம் எழுந்தது. மறு கணம், அதைத் திரும்பவும் வைத்துவிடத்தானே போகிறோம் என்ற ஆறுதலோடு வேங்கை மரத்தை விட்டுச் சென்று அந்த ஓலையை எடுத்தான்.

அதைப் பிரித்து முதல் வரியைப் படித்துப் பார்த்ததும் அது காதல் ஓலை அல்லவென்று தெரிந்து, மேலும் சில வரிகளைப் படித்துப் பார்க்கையில் அவன் முகத்தில் பயம் கப்பிக்கொண்டது! கையி லிருந்த ஓலை நழுவ, ஆவென்று அலறி அசைவற்று நின்றுவிட்டான்!

## 2—5

## குள்ள மனிதன்

அந்தப் பெண் எந்தத் திசையில் செல்கிருள் என்பதை அறிய வேகமாக அந்தக் குன்றின்மீது குலசேகரன் ஏறினுன்.

அது மிகவும் சிறிய குன்ருனதால், மிக விரைவில் அதன் உச்சியை அடைந்துவிட்டான். அங்கே இடிந்த மண்டபம் ஒன்று இருந்தது. அதன் பக்கத்தில் நின்று கீழே அவன் எட்டிப்பார்த்தான்.

அந்தப் பெண்ணின் மேலாடை சுாற்றில் படபடக்க, குதிரை புத்த புரத்தை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் திரும்பிப் பார்த்தால் உச்சிமீது தான் நின்றிருப்பது தெரிந்தாலும் தெரிந்துவிடும் என்ற சந்தேகத்தினுல், சிறிது கீழே இறங்கி வந்து, ஒரு ஓரமாக ஒண்டி உட்கார்ந்து கொண்டு கவனித்தான்.

வேகமாக ஓடியகுதிரை, அடர்ந்த மரங்களுக்குள்ளே நுழைந்து மறைந்துவிட்டது. பார்வையிலிருந்து அவள் மறைந்துவிட்ட பிறகுதான், ஓலையின் நினைவு அவனுக்கு வந்தது. உடனே குன்றை விட்டுக் கீழே இறங்கினுன்.

தரையில் கிடந்த ஓலையைக் குனிந்து எடுத்துத் திரும்பவும் ஒரு முறை படித்துப் பார்த்தான்.

“தூமகேது சாதாரணமானவன் அல்லவே! இந்த ஒன்றை வைத்தே என் ஆட்சியை அஸ்தமிக்கச் செய்தாலும் செய்து விடுவானே!” என்று முணு முணுத்தவாறு மெள்ள நடந்தான்.

“இந்த ஆபத்தினின்றும் எப்படித் தப்புவது?” என்ற யோசனையோடு ஒரு பாறையின்மீது சோர்ந்து உட்கார்ந்து நிலவைப் பார்த்தான்.

“சந்திரனையும், நட்சத்திரங்களையும் கண்டால், எனக்கு அதிக ஆசையாக இருக்கிறது! இதோ பாருங்கள் அப்பா, சந்திரன் எனக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டே ஓடுகிருன். நட்சத்திரங்கள், ‘விளையாடலாம் வா! வா!’ என்று கண்ணுல் என்னைக் கூப்பிடுவதைப் பாருங்கோ, அப்பா! இவற்றை எவ்வளவு நேரம் பார்த்தாலும் எனக்கு ஆசை தீரமாட்டேன் என்கிறதே! அந்தச் சூரியனை நீங்க தூக்கிலே போட்டுச் சாகடித்துவிட்டால் நாம் பகலில்கூடச் சந்திரனைப் பார்க்கலாம்அல்லவா?” என்ற குழந்தை விக்கிரமனின் பேச்சு, அவன் நினைவிற்கு வந்தது.

குழந்தையின் அன்பு உணர்ச்சியை அழுத்திக்கொண்டு, அவன் மனத்தில் ஓர் அச்சம் எழுந்தது. பழையபடி நான் ஆட்சியை இழந்து பதுங்கி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுமா என்ற எண்ணத்தோடு கையிலிருந்த ஓலையைப் பார்த்தான்.

“அந்த ஆபத்தினின்றும் எப்படித் தப்புவது” என்ற கேள்வி திரும்பவும் அவன் எதிரே வந்து நின்றது.

உடனே சுவடியடிகளின் நினைவு வரவே, அவரிடம் சென்று தான் யோசனை கேட்கவேண்டுமென்ற முடிவோடு, எழுந்து ஊரை நோக்கி நடையும் ஓட்டமுமாகச் சென்ருன்.

புத்தவிகாரத்தில் படுத்திருந்த சுவடியடிகளின் பக்கத்தில் போய் மெள்ள உட்கார்ந்தான்.

“தூங்கும் அடிகளை எழுப்புவது சரியா?” என்ற தயக்கத்தோடு வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

“பூஞ்சோலை, உனக்கென்ன தூக்கம் வரவில்லையா?” என்று கேட்டுக் கொண்டே சுவடியடிகள் எழுந்து உட்கார்ந்தார்.

“விழித்துக் கொண்டுதான் இருக்கிறீர்களா?”

“ஆமாம் என்ன செய்தி?”

“வெளியில் வாருங்கள் சொல்கிறேன்!”

இருவரும் எழுந்து வெளியே வந்து புத்தவிகாரத்திற்கு எதிரிலிருந்த புற்றரையில் உட்கார்ந்தனர்.

“நீ வெளியில் சென்றதை நான் பார்த்தேன்! அப்பொழுதிலிருந்தே எனக்குத் தூக்கம் வரவில்லை! எங்கு சென்றுவிட்டு இவ்வளவு நேரம் கழித்து நீ வருகிருய்?”

“தூக்கம் வராததினுல், சிறிது நேரம் காற்றில் உலவிவிட்டு வரலாமே என்று புறப்பட்டேன்! உலவச் சென்ற இடத்தில் ஒரு முக்கியமான ஓலை கிடைத்தது.

“அதென்ன அப்படிப்பட்ட முக்கியமான ஓலை அது?”

''ஏரியின் தெற்குக் கோடியில்' ஒரு குன்று இருக்கிறது அல்லவா?'

''அவ்வளவு தூரமா இப்பொழுது நீ சென்றுவிட்டு வருகிருய்?''

''ஆமாம் அடிகளே, அதனுல் தான் அந்த ஓலையை என்னுல் கண்டுபிடிக்க முடிந்தது! அந்தக் குன்றின் அடிவாரத்தில் நான் சென்று கொண்டிருந்தபோது, ஒரு பெண் குதிரைமீது அங்குவந்தாள். உடனே நான் பக்கத்திலிருந்த வேங்கை மரத்தின் பின்னுல் ஒளிந்துகொண்டேன். பாறையின் இடுக்கிலிருந்து ஒரு ஓலை எடுத்தாள் அவள்! தான் கொண்டுவந்திருந்த ஓலையை அந்த இடுக்கில் வைத்துவிட்டு, எடுத்த ஓலையைப் படித்துப் பார்த்துவிட்டுக் குதிரை மீது சென்றுவிட்டாள். உடனே அந்த இடுக்கிலிருந்த ஓலையை நான் எடுத்துப் படித்துப் பார்த்தேன்!''

''அதில் என்ன எழுதியிருந்தது?''

''அது ஏதோ காதல் ஓலையாகத் தான் இருக்குமென்று நினைத்து எடுத்துப் பார்ப்பதா கூடாதா என்று கூடத் தயங்கினேன்! கடைசியில், பார்த்தால் அது என்னைப் பற்றிய ஓலையாகவே இருக்கிறது!''

''அப்படியா?''

''அமாம் அடிகளே, இதோ பாருங்கள் அந்த ஓலையை!'' என்று தலைப்பாகைக்குள் வைத்திருந்த அந்த ஓலையை எடுத்து அவரிடம் தந்தான்.

அந்த ஓலையை வாங்கி அவர் மனதிற்குள்ளேயே படித்துப் பார்த்தார்.

''ஒற்றர் நாயகம் அவர்களுக்கு மிகவும் தாழ்மையோடு எழுதிக் கொண்டது. நமது அரசர் குலசேகரன் மாறுவேடத்தில் இங்கு வந்திருக்கிருர். இன்று மாலை அவரும் தூக்கிவிடப்பட்ட பொன்னையாவின் தங்கையான அஞ்சலையும் பேசிக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அவர்கள் என்ன பேசுகிருர்கள் என்று கேட்க புதருக்குப் பக்கத்தில் பதுங்கி நின்றேன்! உடனே பைத்யக்காரி திருமேனி அங்கே வந்து எல்லாவற்றையும் கெடுத்துவிட்டாள். அவளைத் தேடிக்கொண்டு தோழிகள் அங்கே வரவே, அவர்களின் கண்ணில் பட்டுவிடக் கூடாதே என்று நான் வந்துவிட்டேன்! சுவடியடிகள் என்பவரோடு, நமது அரசர் புத்த விகாரத்தில் தங்கியிருக்கிருர். அவர் இங்கு எதற்காக வந்திருக்கிருர் என்ற செய்தி இன்னும் தெரியவில்லை. தெரிந்ததும் ஓலை அனுப்புகிறேன்.

இப்படிக்கு,
தமயந்தி

[ வளரும் ]


# மூர்த்தீஸ் டுடோரியல் காலேஜ்

## கீழரத வீதி, திண்டுக்கல்.

''அலை அலையாக திரண்டு வரும் மாணவர்களுக்காக''

**P. U. C. S. S. L. C.**

- 4, 5ம் பிரிவுகள் 15—6—66ல் ஆரம்பமாகின்றன.
- இடத்திற்கு முந்துங்கள். வெற்றி நிச்சயம்.
- பெண்களுக்கு தனி வகுப்பு, தனிக் கட்டிடத்தில் நடைபெறுகிறது.
- ஹாஸ்டல் உண்டு. லாப்ரடரி அமைந்துள்ளது.

PRINCIPAL:

**C. RAMACHANDRAN,**

B.COM. GRAD. B.I.M. (LOND)



THE SCHOOL OF ENGLISH LEARNING
ஆங்கிலக் கல்வி நிலையம்
60, பிராட்வே, சென்னை-1.

வீட்டிற்கோர் நூல் நிலையம் எங்கள் ஆங்கில மொழிப் பாடங்கள்

ஆங்கிலம் அறிவின் சுடர்— அணையா விளக்கு

வீட்டிலிருந்தபடியே...

குறைந்த செலவில் அடிப்படையிலிருந்து இலக்கண ரீதியாக

நிறைந்த ஆங்கில மொழி ஞானம் பெற

முழு விவரங்களுக்கு உடனே 10-காசு தபால் பில்லையுடன் எழுதுக.

4-ம் பக்கத் தொடர்ச்சி

னால், துப்பாக்கிச்சூடு உயிர் பறிக்கப்படுகிறது ஐயா, இது எங்களுக்கு மட்டுமே சேரவேண்டிய உடைமை; இது எங்கள் பிதுரார்ஜிதம். இதிலே உனக்குப் பங்கு கொடுப்பதால் என் வயிறு காய்ந்து கருகிவிடும்—என் உயிரைக் காப்பாற்றுவதற்காக இதிலே உனக்குப் பங்கு தரமுடியாது; இதுஎன் உடைமை என்று கூறினால் — துப்பாக்கிச் சூடு; உயிர் பறிக்கப்படுகிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்களிடத்தில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, உடைமையைக் காப்பாற்றிக் கொள்ள—உரிமையைக் காப்பாற்றிக் கொள்ளக் கேட்டால் துப்பாக்கியால் சுட்டு உயிரைப் பறித்துக்கொள்கிறார்கள். மக்களது உயிருக்குப் பாதுகாப்புத்தருவதற்காகக் கட்டிலேறி காலம் கடத்துபவர்கள் காலனாக மாறிவிடுகிறார்கள்.

உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தொழில் செய்து தீரவேண்டும் என்பதற்காக வீதிகளில் வேகமாகச் சென்று கொண்டிருக்கிற வேளையில், கார்மோதி, வண்டி மோதி, பஸ் மோதி, லாரி மோதி உயிரை இழக்கவேண்டியிருக்கிறது.

வானூர்தி விபத்துக்கள் ஏராளம். லாரி விபத்துக்களுக்கு எல்லையில்லை; போதாக் குறைக்கு இரயில் விபத்துக்கள் வேறு.

விபத்துக்கள் என்பது எவரும் எதிர்பாராத விதத்தில் எதிர்பாராத நிலையில் எதிர்பாராதநேரத்தில் எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத முறையில் எப்போதோ, எங்கோ ஏற்படுகின்ற ஒன்றாகும்.

ஆனால் இந்த நாட்டில் அண்மைக் காலத்தில் லாரி விபத்துக்களும், இரயில் விபத்துக்களும் எல்லையில்லாமல் வளர்ந்தபடியே இருக்கின்றன.

கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்பட்ட இரயில் விபத்துக்களின் எண்ணிக்கை சுமார் முப்பதுக்கும்மேல். கடந்த ஐந்து திங்கள்களில் மட்டும் சுமார் 16க்கு மேலான விபத்துக்கள் ஏற்பட்டு 300க்கும்மேற்பட்ட உயிரைப் பலிகொண்டிருக்கின்றன. இந்த விபத்துக்களில் முடமானோர் பலர். வாழ்க்கையையே முடமாக்கிக்கொண்டோர் பலர். தாயை இழந்து தவிப்போரும், தாரத்தை இழந்து கதறுவோரும் மகனை இழந்த மாதாக்களும், குழந்தையை இழந்த பெற்றோர்களும் என்ற பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

**நீளுகின்ற இந்த பட்டியலின்மூலம் பெறப்படுவதெல்லாம் இந்தநாட்டில், இந்த ஆட்சியில் மக்களது உயிருக்கும் உடைமைக்கும்பாதுகாப்பு இல்லை என்பதுதான்.**

இந்த நிலைபற்றி நாட்டின் பல துறையிலும் இருக்கின்ற நல்லோரும், அறிவாளரும் பன்முறை அரசுக்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆனால் இதுபற்றியெல்லாம் தங்கள் கவலையைக் காட்டிக்கொள்ளாதவர்கள், நாடாளும் ஆதிபத்தியத்தின்மீதுமட்டும், அக்கறை காட்டவந்துவிடுகிறார்களே என்று நினைத்துப் பார்க்கின்ற நெஞ்சங்கள் விம்மாமல் இருக்கமுடியுமா என்ன?

இந்த விம்மலுக்கிடையேதான், கடந்த 13-ம் நாள் காலையில் பம்பாய், மாதுங்கா இரயில் நிலையத்தில் ஏற்பட்ட விபத்துபற்றியச் செய்திகளை நாட்டு மக்கள் படித்துப் பார்க்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரசினரின் புள்ளிவிவரங்கள்பற்றிய அப்பட்டமான நிலையை மக்கள் புரிந்துவைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப்பொறுத்தவரையில்கடந்தஇந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது நாடெங்கும் பறித்துக் கொள்ளப்பட்ட உயிர்களின் எண்ணிக்கை, **அரசினரின் கணக்குப்படி 50** என்பதையும், இதன் விரிவையும் அறிந்துள்ளவர்கள், பம்பாய் விபத்தின்மூலம் இழந்த உயிர்களின் எண்ணிக்கை 67-க்கும்மேல் என்பதையும் படித்துப் பார்க்கத்தான் செய்வார்கள். காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கையில் வேறு, எத்தனையோ உயிர்கள் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் 1956-ல் நடைபெற்ற அரியலூர் இரயில் விபத்தையும், இரு திங்களுக்குமுன்னர் வடக்கே அடுத்தடுத்து ஏற்பட்ட இரு விபத்துக்களையும் தற்போதைய பம்பாய் விபத்தையும் கூட்டிக் கழித்துக் கணக்குப்பார்க்கிற மக்களின் உயிருக்கு, இனி எந்தப் பாதுகாப்போ தெரியவில்லை!!

ஆதிபத்திய உரிமையில் காட்டுகிற அக்கறையில் ஒரு ஐந்து சதவீதத்தையாவது இந்த மனித உயிர்களின்மீது காட்டக்கூடாதா என்று, வரி வரியென வாரிக் கொடுத்துவிட்டு வாழவே வசதியற்றுத் தவிக்கின்ற "உயிர்கள்" நினைத்துப்பார்ப்பதில நிச்சயம் தவறிருக்கமுடியாது.

அறியாமையாலும், திறமைக்குறைவாலும் ஆட்சியினரின் அநியாயத் திட்டங்களுக்கென விதிக்கப்படும், வரிகளைச் செலுத்திக்கொண்டிருப்பதற்காகவேனும் 'உயிர்கள்' இருக்கவேண்டாமா? உயிர்களுக்குப் பாதுகாப்பு வேண்டாமா? என்றெல்லாம் கேட்கத்தான் தோன்றும்.

பிரிந்து சென்றுவிட்ட 'உயிர்கள்' — இருந்து இன்னல்படுகின்ற 'உயிர்களை'ப் பார்த்துப் பரிதாபப் படும்நிலை இந்த நாட்டில் ஏற்பட்டுவிட்டது.

இதற்குள்ள ஒரே பரிகாரம், இரயில் அமைச்சர் திரு. எஸ். கே. பாட்டில், "பதவிவிலகல்மூலம் குறைபாடுகள் நிவர்த்தியாகிவிடுமென்றால் 50-முறைகூட விலகுவேன்" என்று ஆணவமாகப் பேசுவதும், அடுத்த 24-மணிநேரத்தில் பதவி விலகல் கடிதம் தருவதும், 'அவர் பதவி விலகினால் நான் ஒப்புக்கொள்வேன் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது' என பிரதமர் இந்திராகாந்தி அறிவிப்பதும், பதவி விலகலை நான் ஒப்புக்கொள்ளவில்லையெனக்கூறுவதும், ஊழியர்களை வேலை நீக்கம் செய்வதுமான நாடகம் நடத்துவதுஅல்ல —ஆட்சிக் கோலேந்தி அரசுக் கட்டிலமர்ந்துள்ள அத்துணை அமைச்சர்களுமே பதவி துறந்தாகவேண்டும்; உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புத் தருவதற்கு ஒழுங்கான, நாணயமான, நம்பிக்கையான உத்திரவாதமளிப்பவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும்.

ஐந்துரூபாய்க்கும், பத்து ரூபாய்க்கும் 'ஆளும் உரிமை' அளிக்கும் 'ஆற்றலை' விலைகூறிவிடுவதனால் ஏற்படும் விபரீத நிலைமையையும் அதன் விளைவுகளையும் வாழவேண்டியுள்ள 'உயிர்கள்' நிச்சயம்சிந்தித்தே தீரவேண்டும். தெளிவுபெற்றேயாகவேண்டும். பெறுகின்ற தெளிவு, பிரிந்த 'உயிர்களின்' கிண்டல் கேலிகளிலிருந்துமீள்வதாயிருக்கவேண்டும்!!

✽

# ஊர்வலம் பார்த்தீர்களா ?

**நீண்ட இடைவெளிக்குப் பிறகு—**

திருச்சிமாநகரில் கடந்த 11, 12ல் தஞ்சை, திருச்சி ஆகிய இரு மாவட்டங்களும் இணைந்த மாநாடு நடைபெற்றது.

மாநாட்டையொட்டி நடைபெற்ற ஊர்வலம், தொடக்கத்தில் சிற்ருறுபோல் தொடங்கி, பெருநதிபோல், மாநாட்டுத் திடலில் கலந்தது.

மாநாட்டு ஊர்வலம், காங்கிரசார் தம் எதேச்சாதிகாரத்தைக் குத்தித் துளைக்கும் கூரம்புபோல, முனை சிறுத்து, முடிவு பெருத்திருந்ததை நினைக்கும்போதில், தாங்கள் கூரம்புகள்தான் என்பதை எடுத்துக் காட்டத்தானே என்னவோ, கழகத் தோழர்கள் அப்படித்தான் காணப்பட்டார்கள்.

ஊர்வலம் புறப்பட்ட இடத்திலிருந்து, மாநாட்டுத் திடல்வரை சுமார் எட்டுமைல தூரமும், வீதிகளின் இருமருங்கிலும், இருவண்ணக் கொடிகளையும், முழக்கத் தட்டிகளையும் ஏந்தி, ஊர்வலத்தில வந்தவர்களது எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகக் கழக ஆதரவாளர்களும், பொது மக்களும் முகம் மலர, கண்மலர, நின்ற காட்சி எண்ணி எண்ணி மகிழத்தக்கதாயிருந்தது.

ஊர்வலம், பாலக்கரையை மையமாய்விட்டு நகர்ந்துகொண்டிருந்தது. 60 வயதுக்கும் அதிகமாயிருக்கும் என்று கருதத்தக்க மூதாட்டியார் ஒருவர்—

"ஆறுஎழு அவுன்சு அரிசின்னு கல்லையும் மண்ணையுங் கலந்து கொடுக்கிற பாவிங்களை ஒழிக்கிறதுக்கு இந்த தம்பிங்களே போதும்"

எனக் கண்கலங்கக் கூறிய நிகழ்ச்சி புலலரிக்கச் செய்வதாயிருந்தது. அந்த மூதாட்டியார் அப்போது உகுத்தது ஆனந்தக் கண்ணீர்தான்! என்றாலும், பொதிந்துகிடந்த குமுறலை வெளிப்படுத்தக் கழக ஊர்வலம் நன்கு பயன்பட்டிருக்கிறது.

ஊர்வலம் வந்துகொண்டிருக்கும்போதே, வீதிகளில் கூட்டத்தை இடித்து முந்திக்கொண்டும் தாவிக்கொண்டும் வந்து ஊர்வலத்தையும், அதன் சில 'காட்சி'களையும் புகைப்படம் எடுக்க முயன்றவர்களது உணர்ச்சிக்குப் பொருள் தர வேண்டுமானால்,

மூலையில் முக்காடிட்டு அமர்ந்தபடி, கழக வளர்ச்சியையும், அதன் செயல் திறனையும், சிறப்பையும் எண்ணி எண்ணிப் பெருமூச்சுவிடும் கூட்டத்துக்கு வர முடியாத ஆளவந்தாருக்கும் சில காங்கிரஸ்காரர்களுக்கும் காட்டிக் காட்டி உண்மையை உணர்த்தத்தான்

—என்றுதான் கூறவேண்டும். இந்தக் கருத்தை, பாலக்கரையைக் கடந்து கண் மருத்துவமனையை ஊர்வலம் அணுகிக்கொண்டிருந்த வேளையில், நாகரிக உடையணிந்து, அதிகாரிபோல் காணப்பட்ட ஒருவர் வாய்விட்டுக் கூறக்கேட்டேன்.

புகைவண்டி தொடர்ப்பாதையை கடக்குமிடத்தில் நின்ற சிலர், 'ஒண்ணேமுக்கால் மணி நேரமா நிக்கிறோம்; ஊர்வலம் எங்கே முடியுதுண்ணு தெரியலியே! அடேயப்பா! எம்புட்டு நீளம்!' என்றார்கள்.

அதைக் கேட்ட பெண்மணி ஒருவர், 'அடுப்பிலே பூனை தூங்கற நிலைமைக்கு நம்மை வச்சிருக்கிற இந்த காங்கிரசுப் பீடைங்க எங்கெங்கே இருக்குதுங்களோ, அங்கே வரைக்கும் இது நீண்டுக்கிட்டுதான் இருக்கும்"

—என்று தெளிவான சரியான அரசியலை, அடுப்பங்கரை மொழியில் கூறினார். நின்ற கூட்டம் அதைக் கேட்டு கொல்லெனச் சிரித்தது.

"இந்த தினமுனு கானு போகிற வேகத்தைப்பார்த்தா இருக்கிற நெலைமைப்படி வார எலெக்ஷனிலே காளை மாடு கட்டறுந்து போயிடும்போலதான் தோணுது!"

இப்படிக்கூறிக்கொஞ்சம் மார்பை நிமிர்த்திக் கொண்டார் 50 வயது அளவு உள்ள இன்னொருவர்.

மற்றொரு மருங்கில்,

'நேத்துபெஞ்ச மழையைப் பார்த்தா இவங்க மாநாடு நடக்குமின்னு நான் நெனைக்கலே. இன்னைக்கென்னடான்னு, ஊரே அமர்க்களப்படுதே! அப்பாடி! ரொம்பக்கெட்டிக்காரன்ங்கதான் இவங்க!

—இப்படிச் சொல்லிக் கொண்டே கையை உயர்த்தினார் ஒருவர். எதிரே ஊர்வலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி உயிர்விட்ட ஒரு சிறுவனின் தாய் கதறி, மாரடித்து அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்!

ஆமாம்! அழுதுப் புலம்பிக் கொண்டுதான் வந்தாள்! ஊர்வலத்தில்! தோழர்கள் அமைத்திருந்த காட்சியில்! போலீஸ் உடையில் அந்தக் காட்சியில் இருந்த இருவரைக் கண்டதும் பாவம், அவர் சட்டென்று ஓடப்பார்த்து பின் நிதானமடைந்து, நன்று வேடிக்கைப்பார்த்தார்!

அருகில், ஒரு கடையில் குளிர் பானம் பருகிக்கொண்டிருந்த ஒருவர், கடைக்காரரைப் பார்த்து, மாநில மாநாடா நடத்துறாங்க?' எனக் கேட்டபோது கடைக்காரர் சிரித்தார். சிரித்துக்கொண்டே, 'நீங்க நடத்துற அகில இந்திய மாநாட்டுக்கு இவ்வளவு பேரு வருவாங்களா?—அப்படி ஒரு வரலாறு இருக்கா? என்றார் மேலும் சிரித்தபடி!

பாதி பானம் பருகியபடியே, காசை வீசிவிட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் அவர் நடந்த நடையின் முறுக்குக்கு, 'மாப்பிள்ளை முறுக்கு' என்பதுகூடப் பொருந்துமோ என்னவோ!

மாலையில், நகரமக்கள் ஒருவரையொருவர், ஊர்வலம் பார்த்தீர்களா? என்றும் ஐயோ! அந்தப் பாவி லீவு கொடுக்கவில்லை; கடையைவிட்டுக் கீழே இறங்க முடியவில்லையென்றும், இப்படிப் பார்த்த கோலத்தையும் பார்க்க முடியாத பரிதாபகோலத்தையும் பற்றிப் பேசிப் பேசிச் சப்புக் கொட்டிக்கொண்டனர்.

இலட்சக் கணக்கில் கூட்டம் என்று நான் கூறவுடுவேன்; ஒருக்கால் அது குறைந்த மதிப்பீடு என்றாகிவிட்டால.........'

மொத்தத்தில் தஞ்சை—திருச்சி மாவட்ட மாநாடு மக்களைச் சிந்திக்க வைத்திருக்கிறது.

இந்தச் சிந்தனை ஆற்றலை நம்பக்கம் திருப்பிக்கொள்ள வேண்டியது நமது பொறுப்பு; நமது கடமை!

—சீயேயெம்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். [illegible]